# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
STC.No.332/2007

Deposition of witness for: PW -4

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகமலை | Father/Husband Name | : முத்து ரத்தினம் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.11.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 6th day of 2024.

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)

முதல் விசாரணை:

நான் தாமரைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ரெங்கராஜனை எனக்கு தெரியும். அ.சா.1 ஆறுமுகத்தினை எனக்கு தெரியும். அசா 1 எனக்கு மைத்துனர் முறை ஆவார். 2003ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சொக்கலிங்கபுரம் சென்றிருந்தேன். ரெங்கராஜன் அங்கு வந்திருந்தார். எனது மைத்துனர் ஆறுமுகத்தினை உயர்நீதிமன்றத்தில் கிளாரக் வேலைக்கு சேர்த்து விடுவதாக சொல்லி ரெங்கராஜன், உசிலம்பட்டி நீதிமன்றத்தில் கிளார்க் ஆக இருப்பதாகவும் ரூபாய்.60000 கொடுத்தால் அசா 1 ஆறுமுகத்திற்கு மாண்பமை உயர்நீதிமன்றத்தில் கிளார்க் வேலை வாங்கி தருவதாக ரங்கராஜன் கூறினார். ஆறுமுகமும், ரூபாய்10000 ஐ அன்று ரெங்கராஜனிடம் கொடுத்தார், அப்போது நானும், ஆறுமுகத்தின் அண்ணனும், பூசாரியும் இருந்தோம். ஒரு மாதம் கழித்து ஆறுமுகத்திற்கு வேலைக்கு உத்தரவு பிறப்பித்து விட்டார்கள் என்று கூறி மீத தொகையை ரெங்கராஜன், ஆறுமுகத்திடம் கேட்டார். அப்போது ரூபாய்.27000 மட்டும் ரெங்கராஜனிடம், ஆறுமுகம் கொடுத்தார், மீத தொகையை பணியில் அமர்ந்த போது கொடுப்பதாக சொன்னார். ஆனால் கூறியபடி பணி வாங்கி தரவில்லை. பலமுறை ஆறுமுகம் கேட்டும், பிரயோசனமில்லை.

சொக்கலிங்கபுரத்தில் பெரியவர்களை வைத்து இது குறித்து பஞ்சாயத்து பேசினோம். அப்போது ஒரு பச்சை தாளில் ரெங்கராஜன் ஆறுமுகத்திற்கு வேலை வாங்கி தர முடியவில்லை என்றால் அவர் கொடுத்த காசை திருப்பி தந்து விடுவதாக எழுதிக்கொடுத்துள்ளார். அதற்கு பின்பு ஆறு மாதம் கழித்து புலியங்குளத்தினை சேர்ந்த ஒருவர் எங்களிடம் வந்து அவரையும் ரெங்கராஜன் ஏமாற்றி விட்டதாக கூறினார். ஆறுமுகம் பணத்தினை கேட்டு பார்த்து தரவில்லை என்பதால் ரெங்கராஜனுக்கு எதிராக 2007ம் ஆண்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் பின்பு போலீஸ் விசாரித்து நடவடிக்கை எடுத்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள். வேலை வாங்கி தருவதாக சொல்லி அதனை நம்பி ஆறுமுகம் இருந்து அவரது வாழ்க்கையே போய்விட்டது.

குறுக்கு விசாரணை

அசா.1, அசா.2 மற்றும் பட்டியல் சாட்சி 2 ஆகியோர்கள் எனது மைத்துனர்கள் என்றால் சரிதான். முத்தையா பூசாரி எங்களது உறவினர் அல்ல, தெரிந்தவர், அவர் புதுதாமரைப்பட்டியை அருகே உள்ள சோளம்பதியைச் சார்ந்தவர். முத்தையா பூசாரிதான் அவருக்கு தெரிந்த ஒருவர் இருப்பதாகவும் அவருக்கு வேலை வாங்கிகொடுப்பார் என்று என்னிடம் கூறினார் என்றால் சரியல்ல. முத்தையா பூசாரியும், ரெங்கராஜனும் எனது கடையில் வந்து டீ குடித்தார்கள். என்னிடம் பேசும் போது ரெங்கராஜன்தான், ஆறுமுகத்திற்கு வேலை வாங்கி தருவதாக கூறினார். ரூபாய்.10,000 கொடுத்தது எனக்கு நேரிடையாக தெரியும், ரூபாய்.27000 கொடுத்தது எனக்கு நேரிடையாக தெரியாது, சொன்னார்கள். ஆறுமுகத்திற்கு வேலை வாங்கி தருவதாகவும் அதற்கு லஞ்சமாக நீதிபதிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று ரூபாய்.60000 ஐ ரெங்கராஜன் கேட்டார். லஞ்சம் கொடுப்பது தவறு என்று எனக்கு தெரியும் என்றால் அவர் லஞ்சம் என்று சொல்லிவ்வலை அந்த ரூபாய் கொடுத்தால் தான் ஆர்டர் காப்பி கையில் வரும் என்று சொன்னார். 2003ல் ரெங்கராஜன் பணம் வாங்கி சென்றார் என்றாலும், 2006ல் பச்சை தாளில் அவர் எழுதிக்கொடுத்தார் என்றாலும், 2007ல் அவருக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரிதான். புகார்கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது நானும் உடன் இருந்தேன். அந்த வழககு சம்பந்தமாக புகார் கொடுத்த அன்றே என்னை விசாரித்தார்கள் அதன் பின்பு என்னை விசாரிக்கவில்லை. நான் கூறுவது போல் ரெங்கராஜன் வேலை வாங்கி தருவதாக பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும்,

முத்தையா பூசாரிதான் என்னிடம் எனது மைத்துனர் அசா1க்கு வேலை வாங்கி தருவதாக பணத்தினை பெற்றுக்கொண்டு அவருக்கு தெரிந்த ஒரு நபர் இருப்பதாகவும், அவர் மூலம்வேலை வாங்கி தருவதாக உறுதி அளித்து ஏமாற்றி விட்டார் என்றால் சரியல்ல. முத்தையா பூசாரி மீது புகார் கொடுத்து அவரிடம் இருந்து பணத்தினை பெற முடியாது என்பதால் அரசு ஊழியராக இருக்கும் ரெங்கராஜன்  மீது புகார் கொடுத்தால் அவரிடம் இருந்து பணத்தினை பெற்றுவிடலாம் என்ற அடிப்படையில் பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூபாய்.37000க்கு பச்சை தாளில் ரெங்கராஜனிடம் கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து மிரட்டி வாங்கப்பட்டது என்றாலும், நான் கூறுவது போல் பஞ்சாயத்து பேசி ஊரில் வைத்து வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. புளியங்குளத்தினை சேர்ந்த ஒரு பெண் எனது கடைக்கு வந்து ரெங்கராஜன் அவரையுமு ஏமாற்றி விட்டதாக கூறினார் . நான் கூறுவது போல் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், எனது மைத்துனருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.